


## புக்கிட் சந்து பிரதிபலிப்புகள்

புக்கிட் சந்து பிரதிபலிப்புகள் என்பது பாசிர் பாஞ்சாங் போர், அதில் போரிட்ட மலாய் படைப்பிரிவு (ரெஜிமண்ட்) விரர்கள், புக்கிட் சந்து வரலாறு ஆகியவற்றின் நினைவைப் போற்றிப் பேணும் இரண்டாம் உலகப் போர் சார்ந்த விளக்கமளிக்கும் நிலையமாகும். இந்தத் தளத்தின் வரலாற்றுடன் நெருக்கமான தொடர்பு கொண்டுள்ள ஒரு பங்களாவில் அமைந்துள்ள விளக்கமளிக்கும் நிலையம், நம் நாட்டின் போர்க்கால அனுபவங்களையும். போர்வீரர்களின் வீரம் செறிந்த தியாகங்களையும் நினைத்துப் பார்க்கத் தூண்டும் அதே வேளையில், புக்கிட் சந்து மற்றும் பாசிர் பாஞ்சாங் பற்றிய பன்முகப் பார்வையைப் படைக்க மெய்நிகர்க் காட்சி அமைப்புகளையும் சூழல் சார்ந்த கலைப்பொருட்களையும் பயன்படுத்துகிறது.

## பொது நிகழ்ச்சிகள்

பிப்ரவரியிலும் செப்டம்பரிலும், சிங்கப்பூரில் இரண்டாம் உலகப் போரின்போது நடைபெற்ற முக்கிய நிகழ்வுகளின் நினைவாக நடத்தப்படும் அரும்பொருளகக் காப்பாளர் சுற்றுலாக்கள், சொற்பொழிவுகள் உள்ளிட்ட பல்வேறு சிறப்பு நிகழ்ச்சிகளைக் கண்டு களியுங்கள்.

## பள்ளி வருகைகள்

புக்கிட் சந்து பிரதிபலிப்புகளை ஆராய உங்கள் மாணவர்களை அழைத்து வாருங்கள்!

தொடர்புள்ளவர்களின் சொந்தக் கதைகள், போரின்போது மலாய் படைப்பிரிவினர் பயன்படுத்திய பொருட்கள் ஆகியவற்றின் வாயிலாக மாணவர்கள் மலாய் படைப்பிரிவைப் பற்றி நன்கு புரிந்து கொள்வதோடு, பாசிர் பாஞ்சாங் போரில் இந்தப் படையினர் வெளிப்படுத்திய துணிவையும் செய்த தியாகங்களையும் பற்றி எண்ணிப் பார்ப்பார்கள். மேலும், இந்தத் தளத்தின் போருக்கு முந்திய வரலாற்றையும் தெரிந்து கொள்வார்கள்.

முன்பதிவு செய்ய, நீங்கள் திட்டமிடும் வருகை பற்றிய விவரங்களை NHB_CCMBC_Programmes@nhb.gov.sg எனும் முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்புங்கள். உங்கள் வருகைக்கு வழிகாட்ட உதவும் கற்பித்தல் சார்ந்த வளங்கள் உள்ளன. உங்கள் முன்பதிவு உறுதி செய்யப்பட்டவுடன், பாதுகாப்பு நிர்வாக நடவடிக்கைகள் பற்றிய விவரங்கள் உங்களுடன் பகிர்ந்துகொள்ளப்படும்.

## திறந்திருக்கும் நேரம்

காலை 9.30 முதல் மாலை 5 வரை (செவ்வாய் முதல் ஞாயிறு வரை)
பொது விடுமுறை நாட்களைத் தவிர்த்து, திங்கட்கிழமைகளில் மூடப்பட்டிருக்கும்.
கடைசி நுழைவு அனுமதி மாலை 4.30 மணிக்கு.

## வழிகாட்டிச் சுற்றுலாக்கள்

பாதுகாப்பு நடைமுறைளைப் பொருத்து, பொதுமான வழிகாடடிகள் இருக்கும் பட்சத்தில், இலவச வழிகாட்டிச் சுற்றுலாக்கள் நடத்தப்படும். மேல் விவரங்களுக்கு எங்கள் இணையத்தளத்திற்குச் செல்லுங்கள்.

## தொடர்பு

RBC@nhb.gov.sg

## நாங்கள் இணையத்திலும் இருக்கிறோம்!

www.bukitchandu.gov.sg
reflectionsatbukitchandu
reflectionsatbukitchandu

நிர்வகிப்பாளர்

National Museum of Singapore
National Heritage Board

ஆதரவாளர்

MCCY
Ministry of Culture, Community and Youth

# வருகையாளர் வழிகாட்டி

# REFLECTIONS AT BUKIT CHANDU




## எங்களுக்கு ஆதரவளியுங்கள்

புக்கிட் சந்து பிரதிபலிப்புகள் 1942 பிப்ரவரி மாதம் நடைபெற்ற பாசிர் பாஞ்சாங் போர் நினைவுகளையும், அதில் போரிட்ட மலாய் படைப்பிரிவு வீரர்களின் நினைவையும் போற்றிப் பேணுகிறது. உங்கள் ஆதரவு, தற்போதையத் தலைமுறையும் வருங்காலத் தலைமுறைகளும் இந்த வீரர்களின் தீரத்தினாலும் தியாகத்தினாலும் தொடர்ந்து ஊக்கம் பெற்றிடும் வகையில் இந்தக் கதைகளைப் பேணிக் காத்துப் படைக்க அரும்பொருளகத்திற்கு உதவுகிறது. நன்கொடை அளிக்க அன்புகூர்ந்து QR குறியீட்டை வருடுங்கள் அல்லது உங்கள் கைப்பேசி வங்கிச் செயலியில் (PayNow) UEN எண் T08GB0036BNHF-ஐ உள்ளிடுங்கள். உங்கள் ஆதரவுக்கு நன்றி.

செயல் 1: உங்கள் கைப்பேசி வங்கிச் செயலியில் உட்பதிவு செய்யுங்கள்.

செயல் 2: உங்கள் கைப்பேசி வங்கிச் செயலியைப் பயன்படுத்தி PayNow QR குறியீட்டை வருடுங்கள்.

செயல் 3: நீங்கள் வழங்க விரும்பும் தொகையை உள்ளிடுங்கள். குறிப்பு (reference) என்பதன்கீழ் RBC என உள்ளிட்டு பணப்பரிமாற்றத்தை உறுதி செய்யுங்கள்.




## கண்காட்சி விவரப்பட்டியல்

புக்கிட் சந்து பிரதிபலிப்புகள் அரும்பொருளகக் காப்பாளர்களால் எழுதப்பட்ட இந்த விவரப்பட்டியலும் பொழிப்புரைகளும், பாசிர் பாஞ்சாங்கின் வரலாற்றையும் கதைகளையும் பற்றிய ஓர் அணுக்கமான பார்வையை வழங்குகின்றன. மலாய் படைப்பிரிவின் வரலாறு, 1942 பிப்ரவரி மாதம் நடந்த பாசிர் பாஞ்சாங் போர் முதல் புக்கிட் சந்துவுக்கு (மலாய் மொழியில் "அபின் மலை") எப்படி இந்தப் பெயர் வந்தது என்பது வரை, 14ஆம் நூற்றாண்டின் தொடக்கம் முதல் இன்று வரையிலான இந்தப் பகுதியின் வளமான வரலாற்றைத் தெரிந்துகொள்ளுங்கள்.

இந்த விவரப்பட்டியலின் அண்மை மாற்றங்களை உடனுக்குடன் அறிய, எங்கள் இணையத்தளத்தைப் பாருங்கள் அல்லது ஃபேஸ்புக்கிலோ இன்ஸ்டாகிராமிலோ எங்களைப் பின்தொடருங்கள்.

## மியுசியம் லேபல் கடை

NHB_museumlabel@nhb.gov.sg



உங்கள் கைப்பேசியின் துணையுடன், அரும்பொருளக நூல் வெளியீடுகளையும் அரும்பொருளத்தின் திரட்டை மையப்படுத்தி சிறப்பாக வடிவமைக்கப்பட்ட மியுசியம் லேபல் (MUSEUM LABEL) விற்பனைப் பொருட்களையும் கண்டறியுங்கள். உங்களுக்கு வேண்டியவற்றைத் தேர்ந்தெடுத்து, அவற்றை வாங்க வருகையாளர் சேவை முகப்புக்குச் செல்லுங்கள்.

எங்கள் கடையில் பொருட்களை வாங்குவது அரும்பொருளகத்திற்கும் அது வழங்குபவற்றுக்கும் ஆதரவளிக்க உதவுகிறது.

## இந்தக் கட்டடத்தைப் பற்றி



மேலே உள்ள படம்: புக்கிட் சந்துவில் அபின் பொட்டலமிடும் ஆலை. நன்றி: அமெரிக்க நிலவியல் சங்க நூலகம், விஸ்கோன்சின்-மில்வாக்கி பல்கலைக்கழக நூலகங்கள் (UMW).

இந்த பங்களா முதன்முதலில் 1930ல் அபின் பொட்டலமிடும் ஆலையின் மூத்த பிரிட்டிஷ் அதிகாரிகளுக்கான மற்ற பங்களாக்களோடு சேர்த்து கட்டபபட்டது. மற்ற கறுப்பு-வெள்ளை காலனித்துவ பங்களாக்களின் பாணியின் தாக்கம் இருந்தாலும், இந்த பங்களாவில் தனித்துவமான ஆர்ட் டெக்கோ (art-deco) கலைவடிவ அம்சங்களும் உள்ளன. 1990களில் பொதுமக்களின் அக்கறையால் இந்த பங்களா பேணிக் காக்கப்பட்டு, இரண்டாம் உலகப் போர் விளக்க நிலையமாகப் பயன்படுகிறது. புக்கிட் சந்து பிரதிபலிப்புகள் 15 பிப்ரவரி 2002 அன்று திறக்கப்பட்டது.

# புக்கிட் சந்து: போர் முனை 226

மலாய் படைப்பிரிவு, புதிதாகச் சேர்க்கப்பட்ட 25 வீரர்களுடன் ஒரு ‘பரிசோதனைப் படையாக’ 1933ல் தொடங்கப்பட்டது. பத்தே ஆண்டுகளுக்குள், ஏறக்குறைய 1,400 வீரர்களைக் கொண்ட நன்கு பயிற்சி பெற்ற ஒரு படைப்பிரிவாக அது உருவானது. *புக்கிட் சந்து: போர் முனை 226* கண்காட்சி, மலாய் படைப்பிரிவின் தோற்றத்திலிருந்து 1942ல் பாசிர் பாஞ்சாங் போரில் ஜப்பானியர்களை எதிர்த்து நின்று வீழ்ந்தது வரையிலான கதையைப் பதிவு செய்கிறது.

## 1 மலாய் படைப்பிரிவு

இந்தப் பிரிவில், மலாய் படைப்பிரிவினர் பயன்படுத்திய சாதனங்களிலிருந்து அவர்கள் அணிந்த சிறப்பாக வடிவமைக்கப்பட்ட சீருடைகள் வரை, அதன் தோற்றத்தையும் அமைப்பையும் பற்றி கண்டறியுங்கள். அதோடு, இப்படையின் போருக்கு முந்திய புகைப்படங்களையும் போரின் நாயகர் லெஃப்டினண்ட் அட்னானின் காணொளியையும் புகைப்படத்தையும் காணுங்கள்.





## 2 போர்க்களம்

இவ்வட்டாரத்தில் 1941ல் போர் மூண்டபோது, மலாய் படைப்பிரிவு முன்னிலையில் இருந்தது. கண்காட்சியின் இப்பகுதி, மலாயா மற்றும் சிங்கப்பூரின் தற்காப்பில் மலாய் படைப்பிரிவு வகித்த பங்கையும், 1942 பிப்ரவரி மாதம் நடந்த புக்கிட் சந்து போரில் முடிவடைந்த மலாய் படைப்பிரிவின் கதையையும் விவரிக்கிறது.


## 3 பின்விளைவு

சிங்கப்பூர் சரணடைவதற்குள் 100க்கும் மேறபட்ட மலாய் படைப்பிரிவு வீரர்கள் போரில் மடிந்தனர். அதோடு, சரணடைந்த பிறகு ஜப்பானிய வீரர்கள் உத்தரவிட்டும் சீருடையைக் கழற்ற மறுத்ததால் மேலும் பலர் கொல்லப்பட்டனர். கண்காட்சியின் இப்பகுதி, *தாஆட் செத்தியா* (*Ta'at Setia* - மலாய் மொழியில் “விசுவாசத்துடனும் உண்மையுடனும்”) எனும் படையின் குறிக்கோளுக்கு இறுதி வரை இலக்கணமாகத் திகழ்ந்த இந்த வீரர்களுக்கு அஞ்சலி செலுத்துகிறது.

பிரிட்டிஷ் ராணுவ வீரரின் பொருள் தொகுப்பு






1 மலாய் படைப்பிரிவு
2 போர்க்களம்
3 பின்விளைவு
4 சந்து (அபின்) பொட்டலமிடல்
5 ஓய்வுக்கூடம் (The Lounge)
6 புல்வெளியில்
7 மலாய் படைப்பிரிவு சிற்பம்

வருகையாளர் சேவைகள் | மின்தூக்கி | கழிவறைகள் | பாலூட்டும் அறை

## 4 சந்து (அபின்) பொட்டலமிடல்



குன்றின் அடிவாரத்தில் அபின் பொட்டலமிடும் ஆலை ஒன்று இருந்ததால் இதற்கு புக்கிட் சந்து அல்லது "அபின் மலை" எனப் பெயரிடப்பட்டது. இந்தக் காட்சிக் கூடத்தில், சிங்கப்பூரில் அபின் உற்பத்தியின் வரலாறு, அபின் பொட்டலமிடும் ஆலையில் வாழ்க்கை, மக்கள் அபினுக்கு அடிமையானதால் விளைந்த தீங்கு, அதை நிவர்த்திசெய்ய எடுக்கப்பட்ட முயற்சிகள் ஆகியன பற்றி மேலும் தெரிந்து கொள்ளலாம்.

## 5 ஓய்வுக்கூடம் (The Lounge)



புக்கிட் சந்து பிரதிபலிப்புகள் கண்காட்சி, அபின் பொட்டலமிடும் ஆலையின் மூத்த பிரிட்டிஷ் அதிகாரி ஒருவருக்காகக் கட்டப்பட்ட பங்களாவில் அமைந்துள்ளது. “த லவுஞ்ச்” எனப்படும் ஓய்வுக்கூடத்தில், இந்தக் கட்டடத்தைப் பற்றியும் சுற்றுவட்டாரத்தைப் பற்றியும் மேலும் தெரிந்துகொள்ளுங்கள். பங்களாவில் முன்பு வசித்தவர்கள் இங்கிருந்தவாறு கடல் காற்றையும் கடற் காட்சிகளையும் அனுபவித்திருப்பார்கள்.

## 6 புல்வெளியில்



மலாய் மொழியில் "நீண்ட கடற்கரை" அல்லது "நீண்ட மணல்" எனப் பொருள்படும் பாசிர் பாஞ்சாங், பல நூற்றாண்டுகளாக சிங்கப்பூரின் நிலப்பரப்பில் ஒரு பகுதியாக இருந்து வந்துள்ளது. இரண்டு வெளிப்புற நிறுவல்களின் வாயிலாக, உள்ளூர் அடையாளச் சின்னமான லாங் யா மென் (Long Ya Men - மெண்டரின் மொழியில் “கடல்நாகத்தின் பல் வாயில்”), இந்த வட்டாரத்தில் அமைந்திருந்த அன்னாசிப் பழத் தோட்டங்கள் ஆகியன பற்றி தெரிந்துகொள்ளுங்கள்.

## 7 மலாய் படைப்பிரிவு சிற்பம்



மலாய் படைப்பிரிவின் குழிபீரங்கிப் படைப் பிரிவைச் சித்தரிக்கும் இந்தச் சிற்பம், இரண்டாம் உலகப் போரின் போது இந்த வீரர்களின் தீரத்தையும் தியாகத்தையும் வீரத்தையும் போற்றுகிறது.

## மேலும் பலவற்றுக்கு சாட்பாட் (Chatbot)

எங்ளை சாட்பாட் (Chatbot) உரையாடல் செயலியின் வழி உங்கள் கைப்பேசியில் பிரத்தியேக ஒலிச் சுற்றுலாக்களையும், பல்வேறு மொழிகளில் கண்காட்சிப் பொருட்களின் விளக்க வாசகங்களையும் அனுபவிப்பதோடு, புக்கிட் சந்து பிரதிபலிப்புகள் விற்பனைப் பொருட்களையும் கண்டறியுங்கள். உங்களை பாசிர் பாஞ்சாங் கடற்கரையிலிருந்து மலாய் படைப்பிரிவினர் இறுதியாகத் தற்காத்த இடத்திற்கு அழைத்துச் செல்லும் எங்கள் ஒலி வழிகாட்டியைக் கேட்டுப் பாருங்கள். நீங்கள் அருகிலுள்ள இரண்டாம் உலகப் போர் தொடர்புடைய தளங்களைச் சென்று காண்பதற்கான குறிப்புகளையும் இதில் பார்க்கலாம். QR குறியீட்டை (இடது) வருடி உரையாடி மகிழுங்கள்!

## பொதுவான தகவல்கள்

எங்கள் வருகையாளர்கள், அலுவலர்கள் ஆகியோரின் நலன் எங்களுக்கு மிகவும் முக்கியம். அனைவரின் பாதுகாப்புக்காகவும், அரும்பொருளகத்கினுள் நுழையும் போதும், வெளியேறும் போதும் SafeEntry பயன்படுத்துங்கள். உங்கள் முழுமையான தடுப்பூசி சான்றிதழை வழங்கவும். எந்நேரமும் முகக்கவசம் அணிந்திருங்கள். குறைந்தது ஒரு மீட்டர் தூர இடைவெளியைப் பின்பற்றுங்கள்.

அனைவருக்கும் இனிய அனுபவத்தை வழங்கவும் நம் தேசியத் திரட்டைப் பாதுகாக்கவும் அன்புகூர்ந்து பின்வருவனவற்றைப் பின்பற்றுங்கள்:

- உணவு உண்ணவோ பானம் அருந்தவோ கூடாது
- ஒளிக்கீற்றுடன் புகைப்படம் எடுக்கக்கூடாது
- காணொளி படமெடுக்கக்கூடாது
- கலைப்பொருட்களைத் தொடக்கூடாது
- அளவில் பெரிதான பொருட்கள் அனுமதிக்கப்படாது
- மெள்ளப் பேசுங்கள்
- தயவுசெய்து பிள்ளைகளைக் கவனியுங்கள்

புக்கிட் சந்து பிரதிபலிப்புகள் அனைவருக்குமான ஒரு மகிழ்ச்சியூட்டும் அரும்பொருளக அனுபவத்தை வழங்கக் கடப்பாடு கொண்டுள்ளது. **அனைவருக்கும் உகந்த எங்கள் வசதிகளையும் சேவைகளையும்** பற்றி மேலும் தெரிந்துகொள்ள, எங்கள் வருகையாளர் சேவை அதிகாரியிடம் பேசுங்கள்*!

* *எல்லாக் காட்சிக் கூடங்களும் வசதிகளும் சக்கர நாற்காலிகளிலும் தள்ளு வண்டிகளிலும் செல்லக்கூடியவை. எங்கள் வருகையாளர் சேவை முகப்பில் கையால் இயக்கும் சக்கர நாற்காலிகளும் குறிப்பிட்ட எண்ணிக்கையில் உள்ளன. கண்காட்சி விளக்க வாசகங்கள் பெரிய எழுத்துக்களில் ஆங்கிலம், சீனம், மலாய், தமிழ், ஜப்பானிய மொழிகளில் எங்கள் நடமாடும் ஊடாடும் மேடையிலும் உள்ளன.*